**InCred**
Borrow. With Confidence.

**பிராந்திய அலுவலகம்-மும்பை -** 3 வது மாடி, பி விங், கலெடோனியா பில்டிங், சஹார் ரோடு, அந்தேரி (கி), மும்பை - 400069
**தலைமை அலுவலகம்-** கேபிடல் டவர் பி, 15 வது மாடி, 1502 ஏ, ஜி-பிளாக் (ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி எதிரில்), பாந்த்ரா குர்லா வளாகம், பாந்த்ரா (கி), மும்பை -400 051, இந்தியா

## டேவணித் தொகையும் ஆவணங்களும் டிசம்பர்-18, 2020 மதியம் 12:00 மணி வரை மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டியபடியான அசையும் மற்றும் அசையா சொத்துக்களை ஏல விற்பனை மூலம் விற்பதற்கான பொது அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-ன் (2002 இல் எண்.54) கீழ் இன்கிரெட் பைனான்ஸியல் சர்வீஸஸிடம் அடமானம் வைக்கப்பட்ட அசையா சொத்துக்களை விற்பனை செய்தல். கடன் தொகையினைச் செலுத்தத் தவறியதால் இன்கிரெட் பைனான்ஸியல் சர்வீஸஸிற்குச் சேர வேண்டிய பாக்கித் தொகை மற்றும் வட்டியை வசூலிக்கும் பொருட்டு, மேற்குறிப்பிடப்பட்டுள்ள சட்டம் விதி 13(4)-ன் கீழ் அடமானமாகவுள்ள அசையா சொத்துக்களை, "உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்கும் உரிமையைக் குறிப்பிட்டு இன்கிரெட் பைனான்ஸியல் சர்வீஸஸின் அதிகாரபூர்வ அதிகாரி, கீழே குறிப்பிட்டுள்ள கடன் கணக்குகளுக்கு 2002-ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களைச் சீரமைத்தல் & கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு. 13(2)-ன் கீழ் அறிவிப்பை அனுப்பிச் சொத்துக்களைத் தமது சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டார். அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம் நேரடி ஏல தளத்தில் விற்பனை மேற்கொள்ளப்படும்.

## அசையும்/அசையா சொத்துக்களின் விவரம்

| கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரரின் பெயர்கள்: | அசையா சொத்துக்களின் விவரம் | நிலுவையில் உள்ள தொகை & கோரிக்கை அறிவிப்புத் தேதி | சுவாதீன அறிவிப்பு தேதி மற்றும் சுவாதீன வகை | குறைந்தபட்ச தொகை (ரூபாயில்) / டேவணித் தொகை / ஏலம் அதிகரிக்கும் தொகை | ஆய்வு தேதி / நேரம் |
|---|---|---|---|---|---|
| **ஸ்ரீ பாலாஜி அறக்கட்டளை (கடன் பெறுபவர்)**<br>எண்: 9/6-கென்னடி ஸ்கொயர், மெயின் ரோடு, செம்பியம், பெரவல்லூர், சென்னை, 600011<br>**திரு. சி.எஸ்.பாலமுருகன் (இணை கடன் பெறுபவர்)**<br>எண்: 9/6-கென்னடி ஸ்கொயர், மெயின் ரோடு, செம்பியம், பெரவல்லூர், சென்னை, 600011<br>**திருமதி. ரேவதிஷிரே, (இணை கடன் பெறுபவர்)**<br>9/5-இ.எஸ்.ஐ மருத்துவமனை சாலை, பெரவல்லூர், செம்பியம், பெரம்பூர், சென்னை -600011 | பெரம்பூர் தாலுகா, புரசைவாக்கம், செம்பியம் கிராமத்தில் சர்வே எண்142, TS. எண்: 85, பிளாக் எண்: 13-இல் உள்ள பிளாட் எண்: 149, பழைய கதவு எண்: 6, புதிய கதவு எண்: 9, கென்னடி ஸ்கொயர் மெயின் ரோடு, செம்பியம், சென்னை 600 011 முகவரியைக் கொண்ட 2400 சதுர அடி அளவிலான கட்டிடம், நிலம், வளாகம் மற்றும் இணைந்த பகுதிகளும் எல்லைகள்: கிழக்கில் பிளாட்எண்: 150, மேற்கில் பிளாட் எண்: 148, வடக்கில் கென்னடி மெயின் ரோடின் 40 அடி சாலை, தெற்கில் பிளாட் எண்: 162.<br>பெரம்பூர் தாலுகா, புரசைவாக்கம், செம்பியம் கிராமத்தில் RS No: 142, TS No: 87/1, பிளாக் எண்: 13-இல் உள்ள பிளாட் எண்: 151, கதவு எண்: 4, கென்னடி ஸ்கொயர் மெயின் ரோடு, செம்பியம், சென்னை 600 011 முகவரியைக் கொண்ட 1200 சதுர அடி அளவிலான காலி நிலம், கட்டிடம் மற்றும் இணைந்த பகுதிகளும் எல்லைகள்: கிழக்கில் பிளாட்எண்: 151, மேற்கில் பிளாட் எண்: 150, வடக்கில் கென்னடி மெயின் ரோடின் 40 அடி சாலை, தெற்கில் பிளாட் எண்: 164.<br>பெரம்பூர் தாலுகா, புரசைவாக்கம், செம்பியம் கிராமத்தில் RS No: 142, TS No: 87/2, பிளாக் எண்: 13-இல் உள்ள பிளாட் எண்: 151, கதவு எண்: 4, கென்னடி ஸ்கொயர் மெயின் ரோடு, செம்பியம், சென்னை 600 011 முகவரியைக் கொண்ட 1200 சதுர அடி அளவிலான காலி நிலம், கட்டிடம் மற்றும் இணைந்த பகுதிகளும் எல்லைகள்: கிழக்கில் பிளாட்எண்: 152, மேற்கில் பிளாட் எண்: 151 பகுதி, வடக்கில் கென்னடி மெயின் ரோடின் 40 அடி சாலை, தெற்கில் பிளாட் எண்: 164. | ரூ. 2,10,52,071/- ரூ 16/11/2018 தேதியிட்ட அறிவிப்பு | 22/01/2019 & அடையாள சுவாதீனம். | ரூ.4,50,00,000 /- (நான்கு கோடியே ஐம்பது லட்சம் மட்டும்)<br>டேவணித் தொகை<br>ரூ.45,00,000/ - (நாற்பத்தைந்து லட்சம் மட்டும்)<br>ஏல அதிகரிப்புத் தொகை<br>ஏல அதிகரிப்புத் தொகை 50,000/- (ஐம்பதாயிரம் மட்டும்) | நவம்பர்-17, 2020 முதல் டிசம்பர்-17, 2020 காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை<br>ஏலத் தேதி /நேரம்<br>டிசம்பர்-18,2020 வெள்ளிக்கிழமை மாலை 03.00 மணி 06.00 மணி வரை. |

## விதிகள் மற்றும் நிபந்தனைகள்:

இந்த ஏலம் "உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு"எனும் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

1. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் உள்ள தகவல் மற்றும் விவரங்களின்படி, எந்தவொரு சொத்திலும் எந்தவிதமான வில்லங்கமும் இல்லை. எவ்வாறாயினும், ஏலத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர், ஏலத்தில் விடப்படவுள்ள சொத்து(கள்) சார்ந்து வில்லங்கம், உரிமைகோரல்கள்/உரிமைகள்/∴நிலுவைத் தொகை போன்ற பாதிப்புகள் உள்ளதா எனத் தங்களது சொந்த சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ள உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. இந்த ஏல விளம்பரம் நிறுவனத்தின் சார்பில் எவ்விதஉறுதிப்பாடோ இல்லை, மேலும் நிறுவனத்தின் எந்தவொரு உறுதிப்பாடு வழங்குவதாகவோ எந்தவொரு அர்ப்பணிப்பையும் கொண்டதாகவோ அல்லது எந்தவொரு பிரதிநிதித்துவமும் கொண்டதாகவோ கருதப்படாது. நிறுவனத்திற்குத் தெரிந்த அல்லது தெரியாத, தற்போதுள்ள மற்றும் எதிர்காலத்தில் வரக்கூடிய அனைத்து வில்லங்கங்களுடனும் இந்தச் சொத்து விற்கப்படுகிறது. எந்தவொரு மூன்றாம் தரப்பு உரிமைகோரல்கள்/உரிமைகள்/நிலுவைத் தொகைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி/ஈட்டுக் கடனாளர் எந்த வகையிலும் பொறுப்பேற்க மாட்டார்கள்.
2. ஏலத்தைச் சமர்ப்பிக்கும் முன் சொத்து மற்றும் விவரக்குறிப்பு குறித்து ஆராய்ந்து திருப்தி கொள்வது ஏலதாரர்களின் பொறுப்பாகும். ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் ஏலத்தில் வைக்கப்பட்டுள்ள சொத்தை(களை) நவம்பர்-17, 2020 முதல் டிசம்பர்-17, 2020 காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை ஆய்வு செய்ய அனுமதியுண்டு.
3. ஏலம் கேட்க/வாங்க விரும்புபவர்கள் இன்கிரெட் ∴பைனான்ஸியல் சர்வீசஸ் லிமிடெட், எண் 1, முதல் தளம், ஒ.எம்.எஸ் கோர்ட், நாதமுனி தெரு, தி.நகர், சென்னை 600018. என்ற முகவரியில் உள்ள அலுவலக வளாகத்தில் ஏலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதியில் "இன்கிரெட் ∴பைனான்ஸியல் சர்வீசஸ் லிமிடெட்," என்ற பெயருக்குச் சாதகமாக சென்னையில் செலுத்தத்தக்க வரைவோலை அல்லது பே-ஆர்டர் மூலம் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள டேவணித் தொகையுடன் (EMD) நேரடியாகப் பங்கேற்க வேண்டும். வெற்றிபெறும் விலைக்குறிப்பீட்டாளர் செலுத்திய டேவணித் தொகை விற்பனை விலையில் ஈடுகட்டப்படும். ஏலம் கேட்க/வாங்க விரும்புபவர்கள் ஏலத்தின் போது பின்வரும் ஆவணங்களின் நகல்களைக் கொண்டு வர வேண்டும். i) NEFT/RTGS சலான் அல்லது வரைவோலையின் நகல் ii) பான் கார்டின் நகல் iii) அடையாளம்/முகவரி சான்று (KYC). அதாவது,வாக்காளர் அடையாள அட்டை/ஓட்டுநர் உரிமம்/பாஸ்போர்ட்/ரேஷன் கார்டு போன்றவற்றின் சுய சான்றளிக்கப்பட்ட நகல் இவை இல்லையென்றால் ஏலம் நிராகரிக்கப்பட வாய்ப்புண்டு.
4. ஏலத்தின் போது ஏலம் கேட்கப்பட்டால், விலைக்குறிப்பீட்டாளர்கள் தங்கள் ஏலத் தொகையை -ஏல அதிகரிப்புத் தொகை- (மேலே குறிப்பிட்டுள்ளபடி) அல்லது அதன் மடங்கில் மேம்படுத்தலாம். அதிக ஏலத் தொகையைச் (குறைந்தபட்ச விலைக்குக் கீழே அல்ல) சமர்ப்பிக்கும் ஏலதாரர், தேவையான சரிபார்ப்பிற்குப் பிறகு, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி/ஈட்டுக் கடனாளரால் வெற்றிகரமான ஏலதாரராக அறிவிக்கப்படுவார்.
5. வெற்றி பெற்ற விலைகுறிப்பீட்டாளரின் டேவணித் தொகை (EMD) பகுதி விற்பனை வருவாயாகக் கருதத்தில் தக்கவைக்கப்படும் மற்றும் தோல்வியுற்ற ஏலதாரர்களின் EMD திருப்பித் தரப்படும். டேவணித் தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்படாது. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஏலத் தொகை ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன் வெற்றி பெற்ற விலைக்குறிப்பீட்டாளர் 25% விற்பனைத் தொகையை (ஏற்கெனவே செலுத்திய டேவணித்தொகை உட்பட) ஏலவிற்பனை நடவடிக்கைகள் முடிந்த, விற்பனை நடைபெற்ற அதே நாளில் செலுத்த வேண்டும். மீதமுள்ள 75% தொகையை 15 தினங்களுக்குள் அல்லது கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) சட்டம் 2002 விதி 9-க்கு பொருந்தும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் விருப்பப்படி மட்டுமே எழுத்துப்பூர்வமாக ஒப்புக் கொள்ளப்பட்ட நீட்டிக்கப்பட்ட காலத்திற்குள் செலுத்தப்படவேண்டும். வெற்றிபெற்ற ஏலதாரர் விற்பனைத் தொகையைச் செலுத்தத் தவறினால், முன்பே டெபாசிட் செய்யப்பட்டுள்ள தொகை பறிமுதல் செய்யப்படும் மற்றும் சொத்து மறு ஏலத்திற்கு வைக்கப்படும் மற்றும் ஏலத் தொகையைச் செலுத்தத் தவறியவர் சொத்து/தொகை தொடர்பாக உரிமை கோரிக்கையோ/உரிமையோ கோர முடியாது.
6. விற்பனை சான்றிதழைப் பதிவுசெய்வது வெற்றி பெற்ற விலைகுறிப்பீட்டாளரின் பொறுப்பாகும். மேலே குறிப்பிடப்பட்ட அசையா சொத்துக்கள்/சொத்துக்கு சர்பாசி (SARFAESI) சட்டம் & விதிகள் 2002-இன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் வழங்கப்பட்ட விற்பனைச் சான்றிதழைப் பதிவு செய்வதற்கான முத்திரை வரி, பதிவுக் கட்டணம், பரிமாற்றக் கட்டணம் மற்றும் வேறு செலவுகள் மற்றும் கட்டணங்கள் தொடர்பான அனைத்துச் செலவுகளும் விலைகுறிப்பீட்டாளரின் பொறுப்பாகும். பரிமாற்றம் தொடர்பான மாநில சட்டம்/விதிகளின்படி விற்பனைச் சான்றிதழை விரைவாகப் பதிவு செய்ய வேண்டும், இல்லையெனில் பதிவுசெய்ததில் தாமதம் ஏற்படுவதற்கான காரணத்தைக் குறிப்பிட்டு வாங்குபவர் ஈட்டுக் கடனாளருக்குக் கோரிக்கைக் கடிதம் வழங்க வேண்டும்.
7. ஏலம்/விற்பனை நடவடிக்கைகளில் பங்கேற்க விரும்பும் விலைகுறிப்பீட்டாளர்கள்/வழங்குநர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளைத் தவிர வேறு எந்த நபர்களும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். விற்பனைச் சான்றிதழ் வாங்குபவருக்கு ஆதரவாக ஏல விண்ணப்பப் படிவத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பெயரில் பதிவு செய்யப்படும். அதிக ஏலத்தொகையை ஏற்க வேண்டுமெனக் கட்டுப்பாடு ஏதும் இல்லாத அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு, எந்தவொரு அல்லது அனைத்துக் கோரலையும்(களையும்) ஏற்கவோ, நிராகரிக்கவோ அல்லது எந்தவொரு காரணத்தையும் கூறாமல் ஏலத்தை நிறுத்திவைக்க/தள்ளிவைக்க/ரத்துசெய்யவும் முழுமையான உரிமை உண்டு.
8. இன்கிரெட் ∴பைனான்ஸியல் சர்வீசஸ் லிமிடெட், வசம் உள்ள அடமான சொத்துக்கள்/சொத்தில் இருக்கும் தங்களின் தனிப்பட்ட வீட்டு உடைமைகள்/பொருள்களை இந்த அறிவிப்பு வெளியான 15 நாட்களுக்குள் கடன் வாங்கியவர்கள்/அடமானக்காரர் பெற்றுக்கொண்டு ,ன்கிரெட் ∴பைனான்ஸியல் சர்வீசஸ் லிமிடெட், நிறுவனத்திற்கு முன் அறிவிப்புடன் அகற்ற வேண்டும் என்றும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. இல்லையெனில், இன்கிரெட் ∴பைனான்ஸியல் சர்வீசஸ் லிமிடெட், அவற்றிற்கு எந்தவொரு கடன்பாடோ/பொறுப்போ கொண்டிருக்காது மற்றும் கடன் வாங்கியோர்/அடமானதாரரின் இழப்புப் பொறுப்பில் அதை அகற்றும்.
9. சிறப்பு அறிவுறுத்தல்: இறுதிக் கட்டத்தில் ஏலத்தொகை சமர்ப்பிப்பது விலைகுறிப்பீட்டாளர்களின் சொந்த நலன் கருதி தவிர்க்கப்பட வேண்டும், ஏனெனில் இதுபோன்ற ஐயப்பாடான சூழ்நிலைகளைத் தடுப்பதில் ஏற்படும் ஏதேனும் தவறு/தோல்விக்கு இன்கிரெட் ∴பைனான்ஸியல் சர்வீசஸ் லிமிடெட், பொறுப்பேற்காது. இத்தகைய சூழ்நிலையைத் தவிர்க்கவும் ஏலத்தில் வெற்றிகரமாகப் பங்கேற்கவும் தேவையான அனைத்து ஏற்பாடு/மாற்றுக் காப்பு முறை போன்றவற்றைத் திட்டமிட விலைகுறிப்பீட்டாளர்கள் கோரப்படுகிறார்கள். அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள ஏல விற்பனை முடிவு நேரத்தில் ஏல விற்பனை தானாக நிறைவுக்கு வரும். அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி விரும்பினால் ஏல விற்பனையை 15 நிமிடங்கள் நீட்டிக்கலாம்.

சர்பாசி சட்டம், 2002-இன் கீழ் சட்டப்பூர்வ 30 நாட்கள் விற்பனை அறிவிப்பு

கடன் வாங்கியவர்/உத்தரவாதம் அளிப்பவர்கள் மேலே குறிப்பிட்டுள்ள தொகையைப் புதுப்பிக்கப்பட்ட வட்டி மற்றும் துணைச் செலவினங்களுடன் ஏலத் தேதிக்கு முன்னர் செலுத்துமாறு அறிவிக்கப்படுகிறார்கள். செலுத்தத் தவறும் பட்சத்தில் சொத்து ஏலம் விடப்படும்/விற்கப்படும் மற்றும் நிலுவைத் தொகை ஏதேனும் இருந்தால், வட்டியுடன் மற்றும் செலவினங்களுடன் மீட்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இன்கிரெட் ∴பைனான்ஸியல் சர்வீசஸ் லிமிடெட்,
(விசு லீசிங் & ∴பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் என முன்பு அறியப்பட்டது)

தேதி:13.11.2020
இடம்: சென்னை